**“வாராந்தப் பள்ளி” சப்பிரகமுவ மாகாணம்**

# குடியுரிமைக்கல்வி, தரம் - 09

**அலகு** : 9.1 சமுகப் பாதுகாப்பின் நிலைப்பிற்காக செயற்றிறனுடன் பணியாற்றுவார்

**வாரம்** : 01

**செயற்பாடு** : 9.1.1 சமூக பாதுகாப்பின் பொருட்டு பங்களிப்பு செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் தேடியறிவார்.

**அறிமுகம்** : 9 ஆம் தரத்திற்கு புதிதாக பிரவேசிக்கும் மாணவச் செல்வங்ளே! நீங்கள் முதலாவதாக கற்கப்போவது சமூகத்தினால் உங்களுக்கு கிடைக்கும் பாதுகாப்பு தொடர்பிலாகும். குடியுரிமைக் கல்வி பாடத்தினூடாக எதிர்பார்க்கப்படும் விடயம் நபர் ஒருவர் பாதுகாப்பான வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பதாகும். **சமூக அங்கத்தவர் என்றவகையில் ஒருவர் அச்சம் பயம் இன்றி வாழ்வதற்கு அச்சமூகத்தினால் கிடைக்கும் பாதுகாப்பு சமூக பாதுகாப்பு எனப்படும்.**

**தர உள்ளீடுகள்** : தரம் 9 குடியுரிமைக்கல்வி பாடநூல், சமூக பாதுகாப்பின் பொருட்டு இயங்கும் நிறுவனங்களின் புகைப்படங்கள், பத்திரிகை செய்திகள்.

## <u>மாணவர் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள்</u>

**படிமுறை - 01** : பாடநூலில் உள்ள முதலாவது அலகின் 1 – 10 வரையான பக்கங்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

**படிமுறை - 01** : பயிற்சிக் கொப்பியை பயன் படுத்தி கேட்கப்பட்டுளள வினாக்களுக்கு விடை எழுதுங்கள். பாடசாலை ஆரம்பமானதும் உங்களுடைய வகுப்பாசிரியரிடம் பயிற்சிகளைக் காட்டுங்கள்.

### <u>வினாக்கள்</u>

1. சமூகம் என்றால் என்ன?
2. சமூகப் பாதுகாப்பு என்றால் என்ன?
3. சமூகப் பாதுகாப்பின் மீது செல்வாக்கு செலுத்தும் நிறுவனங்கள் எவை?
4. அந்நிறுவனங்கள் ஒவ்வென்றினாலும் நிறைவேற்றப்படும் பணிகள் 3 வீதம் எழுதுங்கள்?
5. சமூக நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் 05 னைப் பெயரிடுக.
6. சமூகப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக செயற்படும் நிறுவனங்கள் எவை? 6 உதாரணங்கள் தருக?

### <u>தொடர்வேளை:</u>

- பாடநூலின் செயற்பாடு 1.4 ஐ செய்க.
- சமூக பாதுகாப்பிற்கு பங்களிப்பு செய்த நபர்களான ஆபிரகாம் லிங்கன், தோமஸ் அல்வா எடிசன், மர்சலின் ஜயகொடி பாதிரியார் போன்றோரின் முன்மாதிரி பற்றிய கதை/ பேச்சு

*தமிழாக்கம்: ஆசிரியர். ப. செ மோஹன்*

*மீனாட்சியம்மாள் வித்தியாலயம்*

## “வாராந்தப் பள்ளி” சப்பிரகமுவ மாகாணம்

## குடியுரிமைககல்வி தரம் - 09

**அலகு** : 9.1 சமுகப் பாதுகாப்பின் நிலைப்பிற்காக செயற்றிறனுடன் பணியாற்றுவார்

**வாரம்** : 02

**செயற்பாடு** : 9.1.1 சமூக பாதுகாப்பின் பொருட்டு பங்களிப்பு செய்யும் நிறுவனங்கள் தொடர்பில் தேடியறிவார்.

**அறிமுகம்** : சமூக பாதுகாப்பின் மீது செல்வாக்கு செலுத்தும் நிறுவனங்கள் தொடர்பான அடிப்படை அறிவினை பெற்றிருப்பீர்கள் என நம்புகின்றேன். இதற்கேற்ப அரசு சமூக பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்கு சட்டத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றது என்பது பற்றிய ஆரம்ப அறிவினை இங்கு கற்கவிருக்கின்றோம். அரசு இதற்காக நீதித்துறை, காவல்துறை, இராணுவம் போன்ற துறைகளை பயன்படுத்திக் கொள்கின்றது. மேற்குறித்த நிறுவனங்களின் அதிகாரத்திற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். தண்டணைக்கு பயந்து நாட்டின் பிரசைகள் அனைவரும் சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்கின்றனர்.

**தர உள்ளீடுகள்** : தரம் 9 குடியுரிமைக்கல்வி பாடநூல், அருகிலுள்ள வளவாளர்களின் உதவி, வெகுசன ஊடகங்களின் பயன்பாடு (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சமூக வலைதளங்கள்)ள

**<u>மாணவர் செயற்பாடுகளுக்கான வழிகாட்டல்கள்</u>**

**படிமுறை - 01** : பாடநூலில் உள்ள முதலாவது அலகின் 10 – 19 வரையான பக்கங்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

**படிமுறை - 01** : பயிற்சிக் கொப்பியை பயன் படுத்தி கேட்கப்பட்டுளள வினாக்களுக்கு விடை எழுதுங்கள். பாடசாலை ஆரம்பமானதும் உங்களுடைய வகுப்பாசிரியரிடம் பயிற்சிகளைக் காட்டுங்கள்.

**<u>வினாக்கள்</u>**

1. சட்டம் என்றால் என்ன?
2. சட்டத்தின் பண்புகள் 05 தருக?
3. சட்ட மூலங்கள் எவை?
4. சட்டத்தின் பிரதான வகைகளான தொழில் சட்டம், உள்நாட்டுச் சட்டம் என்பவற்றுக்கு உதாரணம் தருக?
5. சர்வதேச சட்டம் என்றால் என்ன? இதிலடங்கும் சட்ட வகைகளுக்கு 3 உதாரணங்கள் தருக?
6. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக காணப்படும் நிறுவனங்களை பெயரிடுக. அவை பற்றி சுருக்கமாக விளக்குக?

**<u>தொடர்வேளை:</u>**

- பாடநூலின் செயற்பாடு 1.6 ஐ செய்க.

*தமிழாக்கம்: ஆசிரியர். ப. செ மோஹன்*

*மீனாட்சியம்மாள் வித்தியாலயம்*